<u>சுருக்கம்</u>

நல வாரியங்கள்—உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் நலத்திட்டங்கள் தொழிலாளர்களை விரைவாக சென்றடைய ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் தொழிலாளர் மற்றும் வேலையளிப்போர் பிரதிநிதிகள் கொண்ட குழு அமைத்தல்—ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத்(ஜ1) துறை

அரசு ஆணை (டி) எண்.414 நாள் 01/06/07

<u>படிக்கவும்:—</u>

1. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்நல வாரியச் செயலாளரின் கடிதம் எண்.999/TNMWWB/07 நாள் 23.3.07.
2. தொழிலாளர்ஆணையரின் கடிதம் எண்.டி1/16123/07நாள் 29.3.07.

<u>ஆணை</u>

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்நல வாரியச் செயலாளர், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்நல வாரியம் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட 12 நல வாரியங்களில் பதிவு செய்துள்ள உடலுழைப்புத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது வாரிசுகளுக்கு வழங்கப்படும் கல்வி உதவி, மகப்பேறு உதவி, இயற்கை மரண உதவி, விபத்து மரண உதவி, ஓய்வூதியம் போன்ற நலத்திட்டங்கள் தொழிலாளர்களை விரைந்து சென்றடைய ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் கண்காணிப்பு குழு அமைக்கலாம் என்று தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட வாரியச் செயலரின் கருத்துருவை பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் தொழிலாளர் ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. சட்டமன்றப் பேரவையில் 19.4.2007—ஆம் நாளன்று நடைபெற்ற தொழிலாளர் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு தொழிலாளர்நல அமைச்சர், நல வாரியங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் நலத் திட்டங்கள் தொழிலாளர்களை விரைந்து சென்றடைய ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் தொழிலாளர் மற்றும் வேலையளிப்போர் பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

3. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, அரசு, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்நல வாரிய செயலாளரின் கருத்துருவை ஆய்வு செய்து, பல்வேறு உடலுழைப்புத் தொழிலாளர்நல வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களது வாரிசுகளுக்கு நலத் திட்டங்கள் விரைவாக சென்றடைய ஒவ்வொரு மாவட்டத்திலும் கீழ்கண்ட அலுவலர்களையும் மற்றும் தொழிலாளர் மற்றும் வேலையளிப்போர் பிரதிநிதிகளையும் கொண்ட குழு அமைத்து ஆணையிடுகிறது.

1. தலைவர் — மாவட்ட ஆட்சித் தலைவர்

2. தொழிலாளர் ஆய்வாளர் — உறுப்பினர்–செயலர்.

3. திட்ட அலுவலர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை — உறுப்பினர்

4. மாவட்ட வருவாய் அலுவலர் — உறுப்பினர்

5. தொழிலாளர் இணை ஆணையர்/ தொழிலாளர் துணை ஆணையர் — உறுப்பினர்

6. இணை இயக்குநர்/துணை இயக்குநர் மக்கள் நல்வாழ்வுத்துறை — உறுப்பினர்

7. மாவட்ட சமூக நல அலுவலர் — உறுப்பினர்

| நிர்வாகத் தரப்பு பிரதிநிதிகள் (7 நபர்கள்) | தொழிற்சங்கப் பிரதிநிதிகள் (5 நபர்கள்) |
|---|---|
| 1)சேம்பர் ஆஃப் காமர்ஸ்<br><br>2) ஓட்டல் உரிமையாளர் சங்கம்<br><br>3) ஐந்து இதர பெரிய தொழில்களின் நிர்வாகத் தரப்பினர் | 1) தொழிலாளர் முன்னேற்றப் பேரவை<br><br>2) சி.ஐ.டி.யு.<br>3) ஏ.ஐ.டி.யு.சி<br>4) ஐ.என்.டி.யு.சி.<br>5) பாட்டாளி மக்கள் தொழிற்சங்கம். |

/த.பி.பா./

4. மேற்குறிப்பிட்ட குழு மாதம் ஒரு முறை கூடி கீழ்கண்ட நேர்வுகள் குறித்து விவாதிக்கும்:–

i) 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்நலச் சட்டத்தின்படி பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள்இனம் காணுதல் மற்றும் புள்ளி விவரம் பராமரித்தல்.

ii) உரிய தொழில் புரியும் தொழிலாளர்களை மட்டும் பதிவு செய்தல்.

iii) உரிய காலத்திற்குள் தொழிலாளர்களை பதிவு செய்து அடையாள அட்டை வழங்குதல்.

iv) பதிவு பெற்ற தொழிலாளரின் கேட்பு மனுக்களில் உள்ள விவரங்களை சரிபார்த்தல்.

v) தொழிலாளரின் கேட்பு மனுக்களில் உள்ள விவரங்கள் குறித்து பதிவு அலுவலர்கள் ஆய்வு செய்து நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் விண்ணப்பங்களை வாரியத்திற்கு அனுப்பி வைத்தல்.

vi) பதிவு அலுவலரிடம் போதுமான அளவு அடையாள அட்டை இருப்பு குறித்து உறுதி செய்தல்.

vii) வாரியச் செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்தும், விரைந்து உதவித் தொகை வழங்குவது குறித்தும் ஆலோசனை வழங்குதல்.

(viii) தொழிலாளர்களின் தொழில் சம்பந்தப்பட்ட நலத் திட்ட உதவிகள் குறித்து ஆலோசனை வழங்குதல்.

ix) பதிவு அலுவலகங்களுக்கு திடீர் ஆய்வு செய்து, ஏதும் குறைபாடிருப்பின் தொழிலாளர் ஆணையருக்கு தகவல் அளித்தல்.

x) பதிவு பெற்ற தொழிற்சங்கங்கள்/தொழிலாளர்களிடம் கலந்தாய்வு செய்து அவர்களுக்கு கிடைக்கப் பெறும் உதவித் தொகைகள் குறித்து விவரம் அறிதல்.

/த.பி.பா./

xi) குழு தீர்மானிக்கும் இதர பிற விஷயங்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர்.பாஸ்கரன்,
சிறப்புச் செயலாளர் (மற்றும்)
செயலாளர் (பொறுப்பு)

பெறுநர்

தொழிலாளர்ஆணையர், சென்னை—600 006
வருவாய் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை—600 05
ஆணையர், ஊரக வளர்ச்சித்துறை, பனகல் மாளிகை,
சைதாப்பேட்டை, சென்னை—15
ஆணையர், சமூகநலத்துறை, சேப்பாக்கம், சென்னை—5
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர், சென்னை—6
செயலாளர், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்நல வாரியம்,
அண்ணாநகர் (கிழக்கு) சென்னை—600 102
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்நல வாரியம்,
சென்னை—600 034
செயலாளர், தமிழ்நாடு வீட்டுப்பணியாளர்நல வாரியம்,
அண்ணாநகர் (கிழக்கு) சென்னை—600 102
<u>நகல்</u>
வருவாய்த்துறை, சென்னை—600 009
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை, சென்னை—9
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை—9
சமூகநலம் மற்றும் சத்துணவு துறை, சென்னை—600 009
மாண்புமிகு தொழிலாளர்நல அமைச்சரின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை—600 009
செயலரின் தனிச் செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை—600 009

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்